*கவனிக்க.- 2019.06.21 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2130 - 2019 ජූනි මස 28 වැනි සිකුරාදා - 2019.06.28
*2130 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | 1168 |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2019, யூலை மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2019, யூலை மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1167 - B81537 - 5,403 (2019/06)

# துணை விதிகள்

**இத் துணைச் சட்டத்தினை கல்பிட்டி பிரதேச சபை அதிகாரப் பிரிவில் பாய்மரம் காற்றாடி மூலம் நீரின் மீது வழுக்கிச் செல்லும் பயிற்சிக்காக பிரதேசத்தினை முகாமைத்துவப்படுத்தல் பற்றிய துணை சட்டம் என்று அறிமுகப்படுத்தப்படும்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தின் 122 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய உரிய சட்டத்தின் 126 ஆம் பிரிவில் (vi) ஆம் உப பிரிவினால் பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரப்படி, கல்பிட்டி பிரதேச சபையினால் ஒழுங்கமைக்கப்பட்டு இங்கு கீழ்க் காணப்படும் உப அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கல்பிட்டி பிரதேச சபை அதிகாரப் பிரிவில் காற்றாடி மூலம் நீரின் மீது வழுக்கிச் செல்லும் பயிற்சி பணியிற்காக பிரதேசத்தினை முகாமைத்துவப்படுத்தல் பற்றிய துணைச் சட்டம், 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி நடாத்தப்பட்ட உரிய பிரதேச சபையின் பொதுக் கூட்டத்தின் போது 11(8) ஆம் இலக்கத்திற்கான பிரேரணை மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.*

*அதன்படி, இத்துணைச் சட்டத்தினை, 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய மேலே குறிப்பிடப்பட்ட பிரதேச சபைச் சட்டத்தின் 123 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவினால் வடமேல் மாகாண சபையின் ஆளுநர் பேஷல ஜயரத்ன பண்டார ஆகிய எனக்கு அளிக்கப் பட்டுள்ள அதிகாரப்படி, என்னால் அனுமதிக்கப்பட்டது என்றும், இவ் அறிவித்தலினை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி தொடக்கம் உரிய துணை விதி பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் நடைமுறைப்படுத்தப்படும் என்று இத்துடன் நான் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

*பேஷல ஜயரத்ன பண்டார,*
*ஆளுநர்,*
*வடமேல் மாகாண சபை.*

*வடமேல் மாகாண அளுநர் அலுவலகம்,*
*2019, மே 24.*

*பாய்மரம் காற்றாடி உலாவல் (Kite surfing) மூலம் வழுக்கிச் செல்லும் பயிற்சி பணிக்காக பிரதேச முகாமைத்துவ துணை விதி.*

1. *கல்பிட்டி பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் அமைந்துள்ள கல்பிட்டி பிரதேச செயலாளரினால் காற்றாடி மற்றும் பாய்மரம் உலாவல் (Kite surfing) மூலம் நீரில் வழுக்கிச் செல்லும் பயிற்சி சேவையினை கொண்டு நடாத்துவதற்காக உகந்த பிரதேசமாக கல்பிட்டி பிரதேச சபையின் நிருவாகம் மற்றும் முகாமைத்துவத்திற்கு உட்பட்டு நியமிக்கப்பட்டதும் கடல் நீரேரி அண்மித்த கடற்கரை பிரதேசம் (இங்கு இதன் பிறகு பிரதேசமாக அடையாளம் காட்டுவது) உரிய பயிற்சி சேவையின் கீழ் நிருவகித்தல், முகாமைத்துவம் செய்தலுக்கான ஏற்பாடுகளை வழங்குவதற்காக விதிக்கப்படுகின்றது.*

2. *இத்துணை விதியினை ஒழுங்கமைப்பதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தின் 122(1) உடன் வாசிக்கப்பட வேண்டிய 126(vi) இன் கீழ் இத்துணை விதிக்கப்படுகின்றது.*

3. *இத்துணை விதி கல்பிட்டி பிரதேச சபையில் காற்றாடி மற்றும் பாய்மரம் உலாவல் (Kite surfing) மூலம் வழுக்கிச் செல்லும் பயிற்சி பணிக்காக பிரதேச முகாமைத்துவ துணை விதி என்று அடையாளம் காணப்படும்.*

4. *(i) இத்துணைவிதியின் கீழ் I ஆம் அட்டவணைக்கு கணிசமான தலைவரினால் பெற்றுக் கொண்ட விதியின் அனுமதிப் பத்திரத்தினால் அன்றி எவர் ஒருவரும், நிறுவனம் ஒன்றினால் இத்துணை விதிக்கு உரிய பிரதேசத்தில் காற்றாடி மற்றும் பாய்மரம் உலாவல் (Kite surfing) மூலம் வழுக்கிச் செல்லும் பயிற்சி பணியில் ஈடுபடலாகாது.*

   *(ii) எவர் ஒருவருக்கு குறித்த இடத்திற்காக பயிற்சி பணிக்காக வழங்கப்பட வேண்டிய ஆகக் கூடிய பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கை அவ்விடத்திற்கு உரித்தாகின்ற கடற்கரையின் நீளம் மீட்டர் அளவில் தீர்மானிக்க வேண்டும்.*

   *(iii) எவர் ஒருவர் தம்மிடத்தில் வழங்கப்பட்டுள்ள பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கை அகற்றப்படும் வகையில் பயிலுனர்கள் பயிலும் பணியில் ஈடுபடலாகாது.*

(iv) பயிற்சியில் ஈடுபடுகையில் ஒவ்வொரு பயிற்சி நிலையங்களின் பயிற்சி பெறுபவர்களை அடையாளம் காணக்கூடிய வகையில் சபை மூலம் வழங்கப்படும் நிறத்திலான மேலாடைகளை அணிய வேண்டும்.

5. (i) மேலுள்ள 4 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்திற்காக கோருகின்ற யாவருக்கும் கல்பிட்டி பிரதேச சபையிற்கு பணம் செலுத்தி பெற்றுக் கொண்ட இத்துணைவிதியில் II ஆம் அட்டவணைக்கு கணிசமான அளவிலான விண்ணப்பப் படிவத்தினால் அதற்காக கோரிக்கைவிடுக்கலாம்.

(ii) இப்பிரிவின் கீழான விண்ணப்பப் படிவத்திற்காக அறவிடப்பட வேண்டிய கட்டணம் காலத்திற்கு பிரதேச சபையினால் காலம் முன்மொழியப்பட்ட தீர்மானத்தினால் சபை தீர்மானித்து வர்த்தமானி ஊடாக வெளியிடப்பட்ட கட்டணமாக வேண்டும்.

(iii) இப்பிரிவின் கீழான கட்டணம், ஆண்டு அனுமதிப் பத்திரம் என்ற அடிப்படையில் மற்றும் ஒரு அனுமதிப்பத்திரத்திற்காக பயிற்சி பெறுநர்களின் எண்ணிக்கைப்படி சபை தீர்மானிக்க வேண்டும்.

6. இத் துணை விதியில் 4 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்படுகின்ற எல்லா அனுமதிப்பத்திரங்களும் துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறுவதனை கவனத்தில் கொண்டு முன்பே முடிவுறுத்தப்பட்டால் அன்றி வழங்கப்பட்ட ஆண்டில் திசம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவுறும்.

7. இத் துணை விதியில் கீழ் அனுமதிப் பத்திரத்திற்காக கோருகின்ற எவர் ஒருவருக்கு கீழ்க் காணப்படும் நிபந்தனைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(i) உரிய பணிக்காக இலங்கை சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) பயிற்றுவிக்கும் பணியின் காற்றாடி மற்றும் பாய்மர உலாவல் மூலம் நீரில் வழுக்கிச் செல்லும் பயிற்றுவிக்கும் பணியினை சர்வதேச சான்றிதழ் உடைய ஒருவர் மூலம் செய்வதுடன். அத்தகுதியின் சான்றிதழ் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.

(iii) பயிற்சிப் பணிக்காக பயிற்சி நிலையம் கடல் நீரேரி மற்றும் கடற்கரை அண்மித்து இத் துணை விதிக்கு உரிய பிரதேசத்தில் கொண்டு நடாத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில், அதற்குரிய கட்டமைப்பு கடற்கரை பாதுகாப்பு திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட திட்டத்திற்கு இணங்க கட்டமைத்து இருக்க வேண்டியதுடன், அனுமதிக்கப்பட்ட திட்டத்தின் பிரதி ஒன்றினை இணைக்க வேண்டும்.

(iv) பயிலுனர்களுக்காக தேவையான முதலுதவி வசதி உற்பட வேறு சுகாதார வசதிகளை ஒழுங்காகவும் பொருத்தமான வகையிலும் கொண்டு நடாத்தப்படுவதாக பிரதேசத்திற்குரிய சுகாதார வைத்திய உத்தியோகத்தரினால் பரிந்துரையுடனான அறிக்கையுடன் அதற்குரிய கோரிக்கையினை சமர்ப்பித்தல் வேண்டும்.

8. பயிற்சி நடவடிக்கைக்காக இவ் அதிகாரப் பிரிவினுள் கடற்கரையோரம் அல்லது கடல் நீரேரியினை அடையாளம் காணல் மற்றும் அடையாளம் காணப்பட்ட கடற்கரை மற்றும் கடல் நீரேரி தொடர்பாக வழங்கப்பட வேண்டிய ஆகக் கூடிய அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை பிரதேச செயலாளரின் தலைமைத்துவத்திலான பிரதேச சபையின் செயலாளர், கடற்கரை பாதுகாப்பு திணைக்கள கல்பிட்டி பிரிவுப் பொறுப்புடைய முகாமையாளர், மீனவ உதவிப் பணிப்பாளர், பிரதேச உத்தியோகத்தர் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரி, பிரதிப் பணிப்பாளர் நகர அபிவிருத்தி அதிகாரி ஆகியோர்களினால் உள்ளடங்கிய குழுவினால் தீர்மானிக்க வேண்டும்.

9. அனுமதிப் பத்திரத்தினால் பயிற்சி பணியினை மேற்கொள்ள வேண்டியது மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 6.00 மணி வரை ஆகும். எவ்விதத்திலும் அக் காலத்தின் பின்பு எவர் ஒருவரும் பயிற்சியில் ஈடுபடலாகாது.

10. பயிற்சிக்காக கடற்கரை மற்றும் கடல் நீரேரியினை உபயோகிக்கும் போது எவ்விதத்திலும் மீன்பிடித் தொழில் பாவனைக்கு எடுக்கப்படுகின்ற, அதற்காக குறிப்பாக ஒதுக்கப்பட்டுள்ள கடற்கரை பிரதேசத்தினை பாவனைக்கு எடுக்கலாகாது.

11. இத் துணைவிதியின் கீழ் செய்யப்படும் பயிற்சி நடவடிக்கைக்கான வசதிகளை பிரதேச சபை மூலம் வழங்கப்படும்.

12. கல்பிட்டி பிரதேச செயலாளர் மற்றும் கல்பிட்டி பிரதேச சபையினால் ஏற்படுத்திக் கொண்ட இணக்கத்தினால் கல்பிட்டி பிரதேச சபை கொண்டு நடாத்துகின்ற நீரேரியின் ஒரு பகுதியில் கைட்ஸ் சர்பின் விளையாட்டினை விளையாடுவதற்காக கல்பிட்டி பிரதேச சபை தீர்மானிக்கின்ற கால எல்லையின் கீழ் அதற்காக III ஆம் உப அட்டவணைக்கு அமைய தற்காலிக அனுமதிப் பத்திரத்தினை

தலைவரினால் வழங்குதல் சட்டரீதியானதுடன், அதற்காக கல்பிட்டி பிரதேச சபையினால் பெற்றுக் கொண்ட இத்துணை விதியில் IV ஆம் அட்டவணைக்கு அமைய விண்ணப்பப் படிவத்தினால் அதற்காக விண்ணப்பிக்க வேண்டும்.

13. 12 ஆம் பிரிவின் கீழான அனுமதிப் பத்திரத்திற்காக அறவிடப்பட வேண்டிய கட்டணம் சபையினால் தீர்மானிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டணமாக வேண்டும்.

14. கல்பிட்டி பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் குடியிருப்பவர்கள் கடற்கரையினை பொழுது போக்கிற்காக காற்றாடி உலாவல் (kite surfing) மூலம் நீரில் வழுக்கிச் செல்லும் செயற்பாட்டில் ஈடுபடுவதற்காக இத் துணைவிதியின் கீழான செயற்பாட்டுக்காக பொருத்தமானதாக இருக்கலாகாது.

15. இத் துணைவிதியில் எந்தவொரு ஒழுங்குவிதிகளையும் முறித்தல் அல்லது மீறுதல் குற்றமாவதுடன், குற்றம் பற்றி உரிய அதிகாரம் உள்ள நீதிமன்றத்தினால் அக்குற்றத்திற்கு குற்றவாளியாகின்ற சந்தர்ப்பத்தில் விதிக்கப்படுகின்ற ஆகக் கூடிய அபராதமும் அம் முறித்தலினை அல்லது மீறுதலினை மேலும் தொடர்ந்து செய்யும் போது அதற்கான குற்றவாளியாகின்ற சந்தர்ப்பத்தில் அம் மீறுதல் பற்றி கவனத்தில் கொண்டு தலைவரினால் அல்லது அதிகாரமுள்ள வேறு ஒருவரினால் எழுத்து மூலமான அறிவித்தலினை பொறுப்படைத்ததன் பின்பு முறித்தல் அல்லது மீறுதல் மேலும் தொடர்ந்து செய்கின்ற எல்லா ஒரு நாளுக்காகவும் விதிக்கப்பட வேண்டிய அதிகபட்ச அபராதத் தொகையில் முறையே, 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தின் 122 ஆம் பிரிவில் (2) உப பிரிவினால் விதிக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய அபராதத் தொகைக்கும் அதிகபட்ச அபராத தொகையாக இருக்க வேண்டும்.

16. இக் கொள்கைப் பிரகடனத்தில் சிங்களம், தமிழ் ஆங்கில மொழிகளுக்கிடையில் ஏதேனும் பொருத்தப்பாடின்மை தோன்றுமாயின், சிங்கள மொழியில் குறிப்பிடப்பட்டுள்ளதே ஏற்றுக் கொள்ளப்படும்.

17. இத் துணை விதியில் சொற்கள் பற்றி கருத்துக்கள் தேவை ஏற்படின்,
''தலைவர்'' என்பது கல்பிட்டி பிரதேச சபையின் தலைவரும்,

''சபை'' என்பது கல்பிட்டி பிரதேச சபையும்,

''பிரதேச செயலாளர்'' என்பது கல்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவிற்குரிய பிரதேச செயலாளரும்,

''ஒருவர்'' என்பது காற்றாடி உலாவல் (kite surfing) மூலம் நீரில் வழுக்கிச் செல்லும் பயிற்சி சேவையினை கொண்டு நடாத்துவதற்காக செயற்படுத்துகின்ற 2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்கத்திற்கான கம்பனிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு நிறுவனம். தனி நபர் அல்லது நபர்கள் அடங்கிய குழுவும்,

''அதிகாரமுள்ள உத்தியோகத்தர்'' என்பது கல்பிட்டி பிரதேச சபையினால் உரிய பணிக்காக அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர் என்று கருதப்படும்.

I ஆம் அட்டவணை — அனுமதிப்பத்திர இலக்கம் : ............

**கல்பிட்டி பிரதேச சபை**

**பாய்மரம் காற்றாடி உலாவல் (Kite surfing) மூலம் நீரில் வழுக்கிச் செல்லும் பயிற்சி பாடசாலையிற்கான அனுமதிப்பத்திரம் - 20 .................. ஆம் ஆண்டு**

1. (அ) பயிற்சி பாடசாலையின் பெயர் : ..........................................................................
(ஆ) பயிற்சி பாடசாலையின் தன்மை (தனி/கூட்டு சேர்ந்த/நிறுவனம்) : ..............................................

2. பயிற்சி பாடசாலையினை கொண்டு நடாத்தப்படுகின்ற அமைவிடம் :
(அ) முகவரி : ..........................................................................................
..........................................................................................
(ஆ) மதிப்பீட்டு இலக்கம் : ..........................................................................

3. (அ) கைத்தொழில்/வர்த்தக உரிமையாளரின் பெயர் : ..............................................................

(ஆ) தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..............................................................

முன்பு இரத்துச் செய்யப்படாத அனுமதிப்பத்திரம் 20 ............... ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி முடிவுற வேண்டும். இன்னும் இவ் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது மேற்குறிப்பிடப்பட்ட பயிற்சி பாடசாலையினை கொண்டு நடாத்துவதற்கு மேலே குறிப்பாக குறிப்பிடப்பட்ட இருப்பிடத்தினை உபயோகிப்பதற்காக மாத்திரமாகும். அது போன்று இந்த உரிய இருப்பிடத்திற்காக சட்டபூர்வமான உரிமைக்கு இது பொருந்தாது.

அனுமதிப்பத்திரத்தினை தெளிவாக தெரியும் வகையில் மேலே குறிப்பிடப்பட்ட இருப்பிடத்தில் காட்சிப்படுத்த வேண்டும்.

ஒரு முறைக்கு பயிற்சி பெறுபவர்களின் ஆகக் கூடிய எண்ணிக்கை ...............

செலுத்தப்பட்ட கட்டணம் ரூ. ............... பற்றுச் சீட்டு இலக்கம் ............... திகதி 20 ...............

...............................
தலைவர்
பிரதேச சபை
(பதவி முத்திரை)

திகதி ..............................

II ஆம் அட்டவணை

**கல்பிட்டி பிரதேச சபை அதிகார பிரிவில் .................................... இருப்பிடத்தில் பாய் மரம், காற்றாடி உலாவல் (Kite surfing) மூலம் நீரின் மேல் வழுக்கிச் செல்லும் பயிற்சி பாடசாலைக்காக அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்.**

1. பயிற்சி பாடசாலையின் பெயர் : ..............................................................
2. முகவரி : ..............................................................
3. தொலைபேசி இலக்கம் : ..............................................................
4. கிராம அலுவலர் பிரிவு : ..............................................................
5. தன்மை (தனிப்பட்ட/கூட்டு) (சேர்ந்த/நிறுவனம்) ..............................................................
6. உரிமையாளரின் பெயர் : ..............................................................
7. உரிமையாளரின் முகவரி : ..............................................................
8. அடையாளட்டை இலக்கம் : ..............................................................
9. வணிகத்தின் தகுதியுடைய பயிற்சியாளர்களின் எண்ணிக்கை : ..............................................................
   (பயிற்சி உரிமப்பத்திரத்தின் பிரதிகளை இணைக்க வேண்டும்)
10. அனுமதிக்கப்பட்ட திட்டத்தின் திகதி மற்றும் இலக்கம் : ..............................................................
    (திட்டத்தின் பிரதி ஒன்றினை இணைத்தல் வேண்டும்)
11. இணக்கச் சான்றிதழின் திகதி மற்றும் இலக்கம் : ..............................................................
    (சான்றிதழின் பிரதி ஒன்றினை இணைத்தல் வேண்டும்)

மேலே குறிப்பிடப்பட்ட விபரங்கள் உண்மையானது என்றும் கட்டணம் ......................................அறவிட்டு அனுமதிப் பத்திரம் வழங்குமாறும் கல்பிட்டி பிரதேச சபையினால் விதிக்கப்பட்டுள்ள எல்லா நிபந்தனைகளுக்கும் கட்டளைகளுக்கும் நான் உடன்படுகின்றேன் என்றும் இத்துடன் கையொப்பமிட்டு வாக்குறுதியளிக்கின்றேன்.

..................................... ..................................... 
திகதி (விண்ணப்பதாரியின் கையொப்பம்)

சுகாதார வைத்திய உத்தியோகத்தர் - கல்பிட்டி

பயிலுனர்களுக்காக தேவையான முதலுதவி வசதி உட்பட மற்றைய சுகாதார வசதி உரியவாறு மற்றும் பொருத்தமான வகையில் கொண்டு நடாத்துவது பற்றி உங்களது அறிக்கையினை வழங்கவும்.

..................................... .....................................
திகதி செயலாளர்,
கல்பிட்டி பிரதேச சபை

**பொது சுகாதார பரிசோதகரின் அறிக்கை**

..................................... .....................................
திகதி பொது சுகாதார பரிசோதகர்

**சுகாதார வைத்திய உத்தியோகத்தரின் பரிந்துரை**

மேலே குறிப்பிடப்பட்ட பொது சுகாதார பரிசோதகரின் அறிக்கைப்படி 20.........ஆம் ஆண்டிற்காக அனுமதிப் பத்திரத்தினை வழங்குவதனை பரிந்துரைக்கின்றேன்/பரிந்துரைக்கவில்லை.

..................................... .....................................
திகதி சுகாதார வைத்திய உத்தியோகத்தர்,

**இறைவரிப் பரிசோதகரின் குறிப்பு**

அறவிடப்பட வேண்டிய கட்டணம்- .................................

..................................... .....................................
திகதி இறைவரி பரிசோதகர்/முகாமைத்துவ உதவியாளர்

உரிய வர்த்தக நிலையம் சம்பந்தமாக பயிற்சி பெறுபவர்கள் ..................... வழங்குவதற்கு அனுமதிக்கின்றேன்/அனுமதிக்கவில்லை. உரிய கட்டணத்தினை அறவிட்டு அனுமதிப்பத்திரத்தினை வழங்கவும்.

..................................... .....................................
திகதி செயலாளர்,
கல்பிட்டி பிரதேச சபை

**வருமான மேம்பாட்டு உத்தியோகத்தரின் குறிப்பு**

அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது.

பற்றுச்சீட்டு இலக்கம்- .................................................
அனுமதிப்பத்திர இலக்கம்- .................................................

..................................... .....................................
திகதி வருமான மேம்பாட்டு
உத்தியோகத்தரின் கையொப்பம்.

III ஆம் அட்டவணை

தற்காலிக அனுமதிப்பத்திர இலக்கம் : ....................................

**கல்பிட்டி பிரதேச சபை அதிகார பிரிவில் .................................... இருப்பிடத்தில் .................................... காற்றாடி உலாவல் (Kite surfing) மூலம் வழுக்கிச் செல்லும் விளையாட்டினை விளையாடுவதற்கான தற்காலிக அனுமதிப்பத்திரம்**

1. பெயர் : ..................................................................................
2. அடையாளட்டை இலக்கம்/வெளிநாட்டு கடவுச் சீட்டு இலக்கம் : ....................................................
3. விளையாட்டினை விளையாடுவதற்கு அனுமதி வழங்கியுள்ள திகதி/திகதிகள் : .......................................
   செலுத்தப்பட்ட கட்டணம் : ரூ ..................... பற்றுச்சீட்டு இலக்கம் : .................. திகதி : 20..................

.................................... ....................................

திகதி — தலைவர்
பிரதேச சபை
கல்பிட்டி

IV ஆம் அட்டவணை

**கல்பிட்டி பிரதேச சபை அதிகார பிரிவில் .................................... இருப்பிடத்தில் காற்றாடி உலாவல் (Kite surfing) மூலம் வழுக்கிச் செல்லும் விளையாட்டினை விளையாடுவதற்கான தற்காலிக அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம்.**

1. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் : ..........................................................................
2. நிரந்தர முகவரி : ..................................................................................
3. அடையாளட்டை இலக்கம்/வெளிநாட்டுக் கடவுச் சீட்டு இலக்கம் : ......................................................
4. தொலைபேசி இலக்கம் : ..............................................................................
5. குடியுரிமை ..................................................................................
6. விளையாட்டினை விளையாடுவதற்கு எதிர்பார்க்கின்ற திகதி/திகதிகள் : ................................................

மேலே குறிப்பிடப்பட்ட திகதிகளில் ......................................இடத்தில் காற்றாடி உலாவல் மூலம் நீரில் வழுக்கிச் செல்லும் விளையாட்டினை விளையாடுவதற்காக தற்காலிக அனுமதிப்பத்திரத்தினை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். பிரதேச சபையினால் செய்யப்படும் விதிகளுக்கு இணங்குவதாக சான்று பகர்கின்றேன்.

.................................... ....................................

திகதி — கையொப்பம்

கட்டணம் அறவிட்டு தற்காலிக அனுமதிப்பத்திரத்தினை வழங்கவும்.

..................................... ..................................... 

திகதி

செயலாளர்,
கல்பிட்டி பிரதேச சபை

**வருமான மேம்பாட்டு உத்தியோகத்தரின் குறிப்பு**

அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது.

பற்றுச்சீட்டு இலக்கம்- ................................................

தற்காலிக அனுமதிப்பத்திர இலக்கம்- ................................................

..................................... .....................................

திகதி

வருமான மேம்பாட்டு
உத்தியோகத்தரின் கையொப்பம்.

6 - 763

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.